## மதுக்கூட நிபந்தனைகள்

**1.** நிர்ணயிக்கப்படும் குறுமத் தொகையை குறைந்தபட்ச தொகையாகக் கொண்டு டெண்டர் முறையில் கடைவாரியாக அதிகபட்ச தொகை கோருபவருக்கு மாவட்ட மேலாளரால் மதுக்கூட தின்பண்ட விற்பனை உரிமம் மற்றும் காலி பாட்டில் அவ்வப்போது சேகரித்தல் மற்றும் அப்புறப்படுத்தல் உரிமம் அளிக்கப்படும்.

**2.** உரிமத்தொகை

(i)அதே கடையின் முந்தைய ஆண்டு மாத சராசரி விற்பனைத் தொகையை (எடுத்துக்காட்டாக ரூ.2,40,00,000 / 12 மாதம் = ரூ. 20,00,000/–) எடுத்துக்கொள்ளவும். அதே கடையின் முந்தைய ஆண்டு மாத சராசரி விற்பனையின் மீது 3 சதவீதம் கணக்கிடப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கணக்கிடப்படும்.

**3.** (அ) இரண்டு மாத உரிமத் தொகையை காப்புத் தொகையாக ஒப்பந்ததாரர் டிமாண்ட் டிராப்ட் மூலம் டாஸ்மாக் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டும். காப்புத் தொகையானது மாதாந்திர கேட்புத்தொகையில் மாற்றம் ஏற்படும் பட்சத்தில் மாற்றம் ஏற்படும். ஆகவே எதிர் வரும் மூன்று மாத தொகையில் 200%- க்கு காப்புத்தொகை குறையும் பட்சத்தில் மீதம் உள்ளத் தொகை நான்காவது மாத ஆரம்பத்தில் ( 5ந் தேதிக்குள்) டாஸ்மாக் மேலாளர்அறிவுறுத்திய படி செலுத்த வேண்டும். இது தவிர ஒவ்வொரு மாதத்திற்கான தொகையை மாத ஆரம்பத்தில் செலுத்தி உரிமத்தை மாதந்தோறும் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். காப்புத் தொகை மற்றும் முன்வைப்புத் தொகை (குறிப்பிட்ட காரணங்களுக்காக பறிமுதல் செய்யப்பட்டால் தவிர) ஒரு வருடம் கழித்து திருப்பித் தரப்படும். காப்புத் தொகை மற்றும் முன்வைப்புத் தொகைக்கு வட்டி ஏதும் கிடையாது.

(ஆ) செலுத்தப்படும் இரண்டுமாத காப்புத்தொகையானது ஒரே வங்கி வரைவோலை (டிமாண்ட் டிராப்ட்) முலம டாஸ்மாக் நிறுவனத்திற்கு செலுத்தப்படவேண்டும். அதைத்தவிர ஒரு மாதத்திற்கான தொகையை அரசு கணக்கில் செலுத்திட ஒரு வங்கிவரைவோலை (டிமாண்ட் டிராப்ட்) 99% தொண்ணூற்று ஒன்பது சதவீத தொகைக்கும் மற்றொரு வங்கிவரைவோலை (1%) ஒரு சதவீதத்திற்கும் டாஸ்மாக் நிறுவனத்திற்கு செலுத்திடவேண்டும். ஆக மொத்தம் புது ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பெறப்படும் வங்கி வரைவோலை எண்ணிக்கை மூன்று மட்டுமே இருத்தல்வேண்டும். அதைப்போலவே இரண்டாவது மாதம் முதல் மாதா மாதம் வழங்க வேண்டிய வங்கிவரைவோலை இரண்டு மட்டுமே இருத்தல் வேண்டும்.

**4.** ஒப்பந்ததாரர் அளிக்கும் ஒப்பந்தப் புள்ளி நிபந்தனையற்றதாக இருத்தல் வேண்டும்.

**5.** ஒப்பந்தப்புள்ளி கொடுப்பதற்கு முன் ஒப்பந்ததாரர் மதுக்கடையின் சுற்றுப்புறத்தை பார்வையிடலாம்.

(a). ஒப்பந்தப் புள்ளி கொடுத்தப்பின் அதை மாற்றவோ திரும்பப் பெறவோ முடியாது.

**6.** 15 நாட்கள் முன்னறிவிப்பு கொடுத்து இந்த ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வர டாஸ்மாக் நிறுவனத்திற்கு முழு உரிமை உண்டு.

**7.** அதிகபட்ச கேட்புத் தொகை குறிப்பிட்டவருக்கே மாவட்ட மேலாளரால், மதுக்கூட தின்பண்ட விற்பனை உரிமம் மற்றும் காலி பாட்டில் சேகரித்துக்கொள்ளும் உரிமம் அளிக்கப்படும்.

**8. (a)** மதுக்கூடத்தின் அனுமதிக் கட்டணம் (குறுமத்தொகை), பிரதி மாதம் 5–ம் தேதிக்குள் செலுத்திவிட வேண்டும். மதுக்கூடங்களில் ஒப்பந்ததாரர் தான் நுகர்வோருக்கு அளிக்கும் வசதிகளுக்காக (உதாரணமாக குளிர்சாதன வசதி) தனியே சேவைக் கட்டணம் வசூலிக்க விரும்பினால் அதற்கென டாஸ்மாக் நிறுவத்தின் முன் அனுமதி பெறவேண்டும். அப்படிப்பட்ட இனங்களில் மாவட்ட மேலாளர் நிர்ணயிக்கும் கூடுதல் சிறப்புக் கட்டணத்தை ஒப்பந்ததாரர் செலுத்த வேண்டும்.

**(b)** மேற்படி நுகர்வோரிடம் வசூலிக்கும் சேவைக் கட்டணத்திற்கான உரிய ரசீதுகள் ஒப்பந்ததாரரால் நுகர்வோருக்கு வழங்கப்பட வேண்டும் என்பதுடன், அது குறித்த கணக்கு விபரங்களையும் டாஸ்மாக் நிறுவனத்திற்கு அளிக்க வேண்டும். மேற்படி சேவைக் கட்டணம் வசூலிப்பது தொடர்பாக அரசுக்கு செலுத்த வேண்டி வரிகள் ஏதுமிருப்பின் அவற்றையும் ஒப்பந்தத்தாரரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**9.** ஒப்பந்ததாரர் வருமான வரி செலுத்துபவராயின், டாஸ்மாக் நிறுவனத்தின் மதுக்கூட உரிமம் பெற்று செயல்பட்ட காலத்திற்கு தொடர்புடைய தனது வருமான வரி விபரங்களை வருமான வரித் துறைக்கு சமர்ப்பித்திருந்தால் அதன் விபரங்களை டாஸ்மாக் நிறுவனத்திற்கு அளிக்க வேண்டும்.

**10.** மேற்படி உரிம நகல் மதுக்கூடத்தில் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும்.

**11.** முன்னாள் தின்பண்ட விற்பனை மற்றும் காலி பாட்டில் சேகரிப்பு உரிமம் பெற்றவருக்கு அவரது கடந்த கால செயல்பாடுகளைக் கருத்தில் கொண்டு உரிமம் வழங்க முடிவு செய்யப்படும்.

**12.** நிர்வாக காரணங்களை ஒட்டி மதுக்கடையை மூட வேண்டியிருந்தாலோ அல்லது வேறு இடத்திற்கு மாற்ற வேண்டியிருந்தாலோ ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு புதிய ஒப்பந்தப்புள்ளி பெறப்படும்.

**13.** அரசு கொள்கையில் மாற்றம் ஏற்படின் இந்த ஒப்பந்தம் தானாகவே முடிவுறும். அவ்வாறு முடிப்பதற்கு ஒப்பந்ததாரர்களுக்கு காரணம் தெரிவிக்க வேண்டியதில்லை. முன் அறிவிப்பும் கொடுக்க வேண்டியதில்லை. அரசு கொள்கையால் டாஸ்மாக் (தமிழ்நாடு மாநில வாணிப கழகம்) மதுக்கடையோ/மதுக்கூடமோ மூடப்பட்டால், அதற்கு ஒப்பந்ததாரர் எந்தவித இழப்பீடும் கோர முடியாது.

**14.** ஒப்பந்ததாரர் மதுக்கூடத்தில் நியமிக்கும் தொழிலாளர்களுக்கு எந்த வகையிலும் தமிழ்நாடு மாநில வாணிப கழகம் பொறுப்பல்ல. ஒப்பந்ததாரர் நியமிக்கும் தொழிலாளர்களுக்கும், டாஸ்மாக் நிறுவனத்திற்கும் இடையில் தொழிலாளி முதலாளி உறவு கிடையாது.

**15**. (a) மாதாந்திர கேட்புத் தொகையானது சம்பந்தப்பட்ட கடையின் மாதாந்திர விற்பனையை பொருத்து மாறுபடும்.

(b) விண்ணப்பிக்கும் ஒவ்வொருவரும் மதுக்கூட ஒப்பந்தம் செய்வதற்கு முன்னரே சம்பந்தப்பட்ட மதுக்கூடத்திறகுண்டான உரிமத்தொகையின் 99% க்கான சேவை வரி 15கூ மத்திய அரசுக்கு செலுத்துவதற்கு ஏதுவாக **(Under the Service Tax Act ( The Finance Act 1994)**-ன் படி மத்திய கலால் வரிஅலுவலகத்தில் தங்களது பெயரை பதிவு செய்து அதன் விவரத்தை இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்த பின்னரே ஒப்பந்ததாரராக நியமனம் செய்யப்படுவர். மேலும் மதுக்கூடங்களில் விற்பனை செய்யப்படும் உணவு பொருட்களுக்கு உணவு தரக் கட்டுப்பாட்டு துறையின் மூலமாக வழங்கப்படும் உணவு பாதுகாப்பு உரிமம் பெற்று அதன் நகலையும் இவ்வலுவலகத்தில் ஒப்படைத்த பின்னரே மதுக்கூடத்திற்கான உரிமம் வழங்க ஏதுவாகும். ஒப்பந்ததாரராக நியமனம் செய்யப்பட்ட பின்னர் மதுக்கூடத்திற்குண்டான உரிமத்தொகையை (99% + 1%) - இரண்டு வங்கி வரவோலையாக தவறாது ஒவ்வொரு மாதமும் 5-ந் தேதிக்குள் செலுத்த வேண்டும். மேலும் மதுக்கூடத்திற்குண்டான உரிமத்தொகையின் 99% -க்கு உண்டான 15% சேவை வரியை தவறாது அடுத்த மாதம் 5-ந் தேதிக்குள் செலுத்தி அதன் நகலை இவ்வலுவலகத்தில் உடனே சமர்ப்பிக்க வேண்டும்.

16. ஒப்பந்ததாரர் தண்ணீர், அனுமதிக்கப்பட்ட குளிர் பானங்கள், சுண்டல், அவித்த மற்றும் வறுத்த பயிறு வகைகள், முட்டை, மீன், மற்றும் இறைச்சி பண்டங்கள் ஆகியவற்றை நியாயமான விலைக்கு மட்டுமே விற்க அனுமதியுண்டு. வெளியில் சமைத்த தின்பண்டங்களை மட்டுமே விற்க அனுமதிக்கப்படும்.

17.அடுப்பு வைத்து சமைத்தல் கூடாது. மதுக்கூடத்தில் அடுப்பு இருக்கக் கூடாது.

18. மின்கட்டணம், தண்ணீர் வசதி மற்றும் இடவசதி போன்ற அனைத்து செலவுகளையும் ஒப்பந்தத்தாரரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

19. எக்காரணம் கொண்டும் பிராணிகளையோ, பறவைகளையோ உயிருடன் மது கூடத்திற்கு எடுத்து வருவதோ, இருப்பு வைப்பதோ அனுமதிக்கப்படமாட்டாது.

20. அதேபோன்று மேற்படி விலங்குகளை/பறவைகளை மதுக்கூடத்தில் வைத்து கொல்வதோ அல்லது சமைப்பதோ அனுமதிக்கப்பட மாட்டாது. மீறினால் உரிமம் ரத்து செய்யப்படும்.

21. மேற்படி உரிமம் மதுக்கூடங்களில் தின்பண்டம் விற்பதற்கும், காலிபாட்டில்களை சேகரித்துக்கொள்ள மட்டுமே. மற்றபடி மதுக்கூடம் டாஸ்மாக் நிறுவனத்தின் முழு கட்டுபாட்டில் இருக்கும். டாஸ்மாக் நிறுவனம் நியமிக்கும் பணியாளர் இந்த மதுக்கூட அனைத்து செயல்பாடுகளையும் கண்காணிப்பார். மதுக்கூட சாவியும் டாஸ்மாக்கிடமே இருக்க வேண்டும்.

(a) ஒப்பந்தப் புள்ளி கொடுத்தப்பின் அதை மாற்றினாலோ அல்லது திரும்பப் பெற்றாலோ, காப்புத் தொகை திரும்ப வழங்கப்பட மாட்டாது.

**22.** வாடிக்கையாளர் எந்தவித வற்புறுத்தலுமின்றி மேற்படி மதுக்கூடத்தில் தானே விட்டுச் செல்லும் காலி பாட்டிலை மட்டுமே மேற்படி ஒப்பந்ததாரர் சேகரிக்க வேண்டும். வாடிக்கையாளர் மது பாட்டிலை எடுத்துச் சென்றால் எக்காரணம் கொண்டும் காலி பாட்டில்களை திருப்பி தரும்படி வற்புறுத்தக்கூடாது.

**23.** காலி பாட்டில்களை உடனுக்குடன் சேகரித்து அப்புறப்படுத்தி விட வேண்டும் எக்காரணம் கொண்டும் டாஸ்மாக் மதுக்கூடத்தில் காலி பாட்டில் சேகரித்து வைக்கக்கூடாது. தவறும் பட்சத்தில் காலி பாட்டில்களை டாஸ்மாக் மதுக்கூடங்களில் இருப்பு வைக்கும் நேரத்திற்காக மாவட்ட மேலாளரால் நிர்ணயிக்கப்படும் கட்டணம் வசூலிக்க டாஸ்மாக் நிறுவனத்திற்கு உரிமையுண்டு. ஒப்பந்ததாரர் காலி பாட்டில்களை குறைந்தபட்சம் வாரத்திற்கு ஒரு முறையாவது அப்புறப்படுத்திட வேண்டும்.

**24.** சேகரிக்கும் காலி பாட்டில்கள் யாருக்கு ஒப்பந்ததாரர் விற்கிறார் என்பதற்கான விவரங்களை முகவரியுடன் கூடிய முழு விபரங்களும் அவ்வப்போது மாவட்ட மேலாளருக்கு அளிக்க வேண்டும்.

**25.** காலி பாட்டில் சேகரிப்பதற்கும் தின்பண்ட விற்பனைக்கும் தேவையான உரிய ஏற்பாடுகளையும், பணியாளர்களையும் ஒப்பந்ததாரர்களே பொறுப்பேற்றுச் செய்துக் கொள்ள வேண்டும். எக்காரணம் கொண்டும் டாஸ்மாக் பணியாளர்களை இதில் ஈடுபடுத்தக் கூடாது. இவ்வாறு நியமிக்கப்படும் பணியாளர்கள் மதுபாட்டில்களை கையாளக் கூடாது. காலி பாட்டில்கள் சேகரிப்பு மற்றும் தின்பண்டங்கள் விற்பது மட்டுமே அவரது பணியாக இருத்தல் வேண்டும். இப்பணியில் ஈடுபடுத்தப்படுபவர்கள் குழந்தை ஊழியர்களாக இருத்தல் கூடாது. 21 வயது முதிர்வடைந்த ஆண்கள் மட்டுமே பணியில் அமர்த்தப்பட வேண்டும்.

**26.** மதுக்கூடங்களில் ஆபாச படமோ, எழுத்தோ, காட்சிகளோ இருக்கக்கூடாது.

**27.** (a) மதுக்கூடத்தினை பொழுதுபோக்கு இடமாகவோ, சூதாடும் இடமாகவோ, ஒப்பந்ததாரர் பயன்படுத்தக் கூடாது.

(b) மதுக்கூடத்தில் சூதாடுதல், பொழுது போக்கு கேளிக்கைகள் நடவாவண்ணம் பார்ப்பது ஒப்பந்ததாரர் கடமை.

**28 (a).** மதுக்கூடத்தின் சுற்றுபுறத்தை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். வாடிக்கையாளரால் விட்டுச் செல்லப்படும் உணவு கழிவுகள், காலி டம்ளர்கள் போன்ற இனங்கள் ஒப்பந்ததாரரின் பணியாளரால் உடனுக்குடன் நீக்கப்பட்டு மதுக்கூடம் சுத்தம் செய்யப்படுவதும், குப்பைகளை அகற்றுவதும் ஒப்பந்ததாரரின் பொறுப்பாகும்.

(b). மதுக்கூடத்தில் எந்தவிதமான அசுத்தம் இல்லாமல், அவ்வப்போது அப்புறப்படுத்திட வேண்டும்.

**29.** டாஸ்மாக் கடைகளின் வேலை நேரத்தை ஒட்டியே மதுக்கூடங்களின் வேலை நேரம் நன்பகல் 12.00 மணி முதல் இரவு 10.00 வரை ஆகும். அந்த வேலை நேரத்தின்போது மட்டுமே ஒப்பந்ததாரருக்கு/அவரது பணியாளருக்கு மதுக்கூடத்தில் அனுமதியளிக்கப்படும். மேற்படி தின்பண்ட விற்பனை மற்றும் காலி பாட்டில் சேகரிப்பதில் ஒப்பந்ததாரால் நியமிக்கப்படும்

பணியாளருக்கான அடையாள அட்டை மாவட்ட மேலாளரால் வழங்கப்படும். அடையாள அட்டையில்லாத வெளி நபர் எவரும் மேற்படி பணியில் ஈடுபடுத்தப்பட கூடாது.

30. தின்பண்ட உரிமம் பெற்ற ஒப்பந்ததாரர் தான் விற்பனை செய்யும் தின்பண்டங்களுக்கான உரிய விலைப்பட்டியலை பார்வைக்கு வைப்பதுடன் தின்பண்டங்கள் சுகாதாரமான முறையில் தயாரிக்கப்பட்டதாகவும், சுத்தமாக பராமரிக்கப்பட்டதாகவும் அது தொடர்பான அரசின் அத்தனை சட்டதிட்டங்களுக்கு உட்பட்டனவாகவும் இருத்தல் அவசியம். இந்த தின்பண்ட பொருள்கள் தரக்கட்டுபாடு சோதனைக்கு உட்படுத்தப்படும்.

31. தின்பண்ட விற்பனை மற்றும் காலி பாட்டில் சேகரிப்பு தொடர்பான கணக்குவழக்குகளை டாஸ்மாக் நிர்வாகம் கோரினால் அந்த விபரங்களை டாஸ்மாக் நிறுவனத்திற்கு உடன் அளிப்பது உரிமதாரரின் கடமையாகும்.

32. மதுக்கூடத்தில் அரசால் தடை செய்யப்பட்ட எந்த பொருளும் விற்கக் கூடாது மேலும் பீடி, சிகெரெட் போன்றவை விற்க கூடாது.

33. குளிர்பானங்கள், குடிநீர் ஆகியவற்றில் ISI தரச் சான்று பெற்றவையே பயன்படுத்த வேண்டும்.

34. மதுக்கூடத்தில் எளிதில் தீப்பற்றக் கூடிய பொருள்களை வைக்கக்கூடாது மதுக்கூடத்தில், சுவற்றிலே கீற்றுக் கொட்டகை போன்றவை பயன்படுத்தல் கூடாது.

35. அரசு அல்லது டாஸ்மாக் நிறுவனம் அவ்வப்போது விதிக்கும் இதர கட்டுப்பாடுகள், வழிகாட்டுதல்கள், விதிகள் போன்றவற்றிக்கு முழுதும் ஒப்பந்ததாரர் கட்டுப்பட வேண்டும்.

36. அரசின் பிற துறைகள் இது தொடர்பாக ஏற்கனவே விதித்துள்ள (அல்லது) விதிக்கும் அனைத்து சட்ட திட்டங்களும் ஒப்பந்ததாரரை கட்டுப்படுத்தும்.

37. அதேபோல் ஆய்வுக்கு வரும் டாஸ்மாக் அலுவலர்களுக்கு அவர்களது ஆய்வின்போது போதிய ஒத்துழைப்பினை ஒப்பந்ததாரர் அளிக்க வேண்டும். டாஸ்மாக் நியமிக்கும் பல்வேறு ஆய்வுக் குழுக்கள் எந்நேரமும் மதுக்கூடங்களை ஆய்வு செய்திட முழு உரிமை உண்டு.

38. திண்பண்ட விற்பனை தவிர மதுக்கூடத்திற்குள் தனியே மதுபானம் விற்பதோ, இருப்பு வைப்பதோ கூடாது.

39. தின்பண்ட விற்பனை மற்றும் காலி பாட்டில் சேகரிப்பு உரிமம் பெற்றவர் மத்திய/மாநில அரசுகளால் அவ்வப்பொழுது அமுல்படுத்தப்படும் மத்திய/மாநில வரிகளை, உதாரணமாக, விற்பனை வரி, சேவை வரி, வருமான வரி (TDS, TCS, etc.) சுங்கவரி மற்றும் பிற வரிகள் அல்லது கட்டணங்கள், உரிமக் கட்டணத்திற்கு மேலாக செலுத்த வேண்டும். மேலும், அரசுத் துறை நிதிநிறுவனங்கள்/ஆணையங்களோடு சட்டப்படி பதிவு செய்ய வேண்டுமாயின் அதற்கும் கட்டுப்பட வேண்டும். இவைகளைத் தவிர, பணியாளர் சேமநலநிதி ஆணையம் (EPF Act) மற்றும் பணியாளர் காப்பீட்டுக் கழகத்தால் (ESIC) ஆணைகள் ஏதாவது பிறப்பிக்கப்பட்டால், அதற்கும் கட்டுப்பட வேண்டும்.

**40.** ஒப்பந்ததாரர்களின் செயல்பாடுகளில் குறைபாடுகள் இருந்தாலோ, முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்டாலோ உரிய விசாரணைக்கு பின்னர் உரிமம் ரத்து செய்யப்படுவது மட்டுமின்றி முன் வைப்புத்தொகையை டாஸ்மாக் நிறுவனமே தக்க வைத்துக்கொள்ளவும், டாஸ்மாக் நிறுவனத்திற்கு முழு உரிமையும் உண்டு.

**41.** உரிமம் காலம் ஓராண்டு காலமாகும். இது முற்றிலும் ஒரு தற்காலிகமான அனுமதி மட்டுமே. ஒவ்வொரு மாதமும் ஒப்பந்ததாரரின் செயல்பாடுகள் மாவட்ட மேலாளரால் கூர்ந்து ஆய்வு செய்யப்படும். உரிமத்தொகையை ஒவ்வொரு மாதமும் நிபந்தனையின்படி செலுத்த தவறினால், உரிமம் புதுப்பிக்கப்படமாட்டாது. மேலும் ஒப்பந்தக் காலத்திற்குள் ஒப்பந்ததாரர் உரிமத் தொகையை குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தத் தவறி அதனால் உரிமம் ரத்து செய்யும் பட்சத்தில், மற்றொரு ஒப்பந்தப்புள்ளி கோரி பின்னர் தேர்வு செய்யும் புதிய ஒப்பந்ததாரர் நியமனம் செய்யும் வரை ஏற்படக்கூடிய நஷ்டத்தையும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் செலவினையும் மேற்படி ஒப்பந்ததாரரிடம் கணக்கிட்டு வசூலிக்கப்படும்.

**42.** மேற்படி உரிமத்தை ஒப்பந்ததாரர் வேறு எவருக்கும் மாற்றி தரக்கூடாது. இவ் விற்பனையை டாஸ்மாக் அனுமதி பெறாத வெளி நபர் கண்காணிக்கவும் அனுமதிக்க கூடாது.

**43.** ஒப்பந்ததாரர் நியமிக்கும் பணியாளர்களின் நன்னடத்தைக்கு ஒப்பந்ததாரரே முழு பொறுப்பாகும். அவரது பணியாளர்கள் சண்டைச் சச்சரவுகளில் ஈடுபடுவதோ டாஸ்மாக் நிறுவனத்தின் சொத்துக்களுக்கு இழப்பு ஏற்படும் வகையில் நடந்து கொள்வதோ அனுமதிக்கப்பட மாட்டாது. தவறும் பட்சத்தில் மாவட்ட மேலாளரால் நிர்ணயிக்கப்படும் இழப்புத் தொகையினை ஒப்பந்ததாரர் வரைவுக்காசோலை மூலம் டாஸ்மாக் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டும். இவ்விஷயத்தில் டாஸ்மாக் மாவட்ட மேலாளர் நிர்ணயிக்கும் இழப்புத் தொகையே இறுதியானது.

**44.** எந்தவித சிக்கலும் இல்லாமல் சுமூகமாக ஒப்பந்ததாரர் ஒப்பந்த இறுதி காலம் வரை செயல்பட்டால் மாத்திரமே காப்பீட்டுத் தொகை திருப்பிக் கொடுக்கப்படும்.

**45.** மதுக்கூடம் சம்பந்தமாக கலப்பட தடுப்புச் சட்டம், தொழிலாளர் நல சட்டங்கள் மற்றும் இதர சட்டங்களுக்கு ஆகியவற்றிற்கு ஒப்பந்ததாரரே முழு பொறுப்பாவார். எந்த வகையிலாவது மேற்கண்ட சட்டங்களின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கையால் டாஸ்மாக் நிறுவனத்திற்கு இழப்பு ஏற்பட்டால் அதனை முழுவதுமாக ஒப்பந்ததாரர் ஈடுகட்ட வேண்டும்.

**46.** இந்த நிபந்தனைகளை ஒப்பந்ததாரர் மீறினால் காப்பீட்டுத் தொகையிலிருந்து இழப்பீட்டு தொகை சரி செய்யப்படுவது உடன் ஒப்பந்தத்தையும்/உரிமத்தையும் டாஸ்மாக் நிறுவனம் ரத்து செய்ய உரிமையுண்டு.

**47.** இந்த நிபந்தனைகளை ஒப்பந்ததாரர் மீறினால், அதனால் டாஸ்மாக் நிறுவனத்திற்கு ஏற்படும் இழப்பினை மாவட்ட மேலாளர் கணக்கிட்டு கூறுவார். அவரது முடிவு இறுதியானது. அவர் கூறும் தொகையை ஒப்பந்ததாரர் டாஸ்மாக் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டும். தவறினால் அந்தத் தொகையை ஒப்பந்ததாரரின் காப்பீட்டு தொகையிலிருந்து நேர் செய்யப்படும்.

**48.** காலி பாட்டில் சேகரிப்பதிலோ, தின்பண்டங்கள் விற்பதிலோ அல்லது மதுக்கூட செயல்பாடு சம்பந்தமாக ஏற்படும் சட்ட சிக்கல்கள் மற்றும் வழக்குகளையும் ஒப்பந்ததாரரே எதிர்கொள்ள வேண்டுமேயொழிய டாஸ்மாக் நிறுவனத்தை தொடர்புபடுத்த இயலாது.

**49.** ஒப்பந்ததாரருக்கும், டாஸ்மாக்கிற்கும் ஏதாவது கருத்து வேறுபாடு / பிரச்சனை எழுந்தால், அதன் மீது சம்பந்தப்பட்ட மாவட்ட மேலாளரின் தீர்ப்பு இறுதியானது.

**50.** (a) ஒப்பந்ததாரருக்கும், டாஸ்மாக்கிற்கும் ஏதாவது கருத்து வேறுபாடு / பிரச்சனை எழுந்தால், ஏற்படின் அதன் மீது சம்பந்தப்பட்ட மாவட்ட மேலாளரின் தீர்ப்பு இறுதியானது.

(b) ஒப்பந்ததாரருக்கும் டாஸ்மாக் நிறுவனத்திருக்கும் இடையில் வழக்கு ஏற்பட்டால் அந்த வழக்கு 1996–ம் ஆண்டின் Arbitration and Conciliation Act–ன் கீழ் சம்மந்தப்பட்ட முதுநிலை மண்டல மேலாளரின் தீர்ப்பிற்கு விடப்படும். அவரது தீர்ப்பே இறுதியானது.

**51.** வேறுவழக்கு ஏதாவது எழுந்தால் சம்மந்தப்பட்ட மாவட்ட எல்லைக்குட்பட்ட நீதிமன்றத்தில்தான் வழக்கு தொடர வேண்டும்.

**52.** மதுக்கடையுடன் இணைந்த மதுக்கூடத்தில், தின்பண்டம் விற்பனை மற்றும் காலிபாட்டில் சேகரம் செய்துக் கொள்ளும் உரிமம் பெற்றவர்கள் ஏனைய மதுக்கூடத்தில் சேகரிக்கப்படும் காலி மதுபாட்டில்கள் யாருக்கு விற்பனை செய்கிறார்கள். ஒவ்வொரு முறையும் எவ்வளவு காலிபாட்டில் விற்பனை செய்கிறார்கள், காலிபாட்டில் வாங்கியவர்கள் எங்கே எடுத்துச் செல்கிறார்கள் போன்ற விவரங்களை தனியாக ஒரு பதிவேட்டில் குறிப்பு வைத்திருக்க வேண்டும்.

53. காலி பாட்டில் சேகரிப்பதிலோ, தின்பண்டங்கள் விற்பதிலோ அல்லது மதுக்கூட செயல்பாடு சம்பந்தமாக ஏற்படும் சட்ட சிக்கல்கள் மற்றும் வழக்குகளையும் ஒப்பந்ததாரரே எதிர்கொள்ள வேண்டுமேயொழிய டாஸ்மாக் நிறுவனத்தை தொடர்பு படுத்த இயலாது.

54. ஒப்பந்ததரருக்கும் டாஸ்மாக் நிறுவனத்திற்கும் இடையில் வழக்கு ஏற்பட்டால் அந்த வழக்கு 1996-ம் ஆண்டின் **Arbitration and Conciliation Act**-ன் கீழ் தீர்த்துக்கொள்ளலாம்.

55. வேறு வழக்கு ஏதாவது எழுந்தால் சம்பந்தப்பட்ட மாவட்ட எல்லைக்குட்பட்ட நீதிமன்றத்தில் தான் வழக்கு தொடர வேண்டும்.